## புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம் - 2021

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பணியகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பணியகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பணியகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும். பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பணியகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பணியகத்தின் தாடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்றுருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்கொண்டு கணக்கீட்டிற்காக பணியகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையானநிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன்

அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகத்தின்

- தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல்,கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பணியகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பணியகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த கிரயம் ரூபா 550,059,778 ஆன நிலையான சொத்துக்கள் தொடர்நதும் பயன்படுகின்ற போதும் அச் சொத்துக்கள் தொடர்பாக இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 பிரகாரம் நிதிகூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லாததுடன் இச் சொத்துக்களில் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பாக மதிப்பீட்டு தவறுகளை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 பிரகாரம் மீண்டும் திருத்தியமைத்து நிதிக்கூற்றுக்களில் சீராக்க நடவடிக்கை | கடந்த கொவிட் தொற்று நிலைமை காரணத்தால் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க முடியாதிருந்ததுடன், நடைமுறையல்லாத சொத்துக்களில் பயன்தரு ஆயட்காலத்தை விஞ்சி மேலும் பயன்பாட்டிக்கு எடுக்கும் சொத்துக்கள் தொடர்பாக மீளாய்வு செய்து பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 பிரகாரம் நடவடிககை எடுக்க எதிர்காலத்தில் | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| எடுத்திருக்கவில்லை. | செயற்பாடுகள் எடுக்கப்படும் | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முதலீடுகள் தொடர்பான வங்கிகளிலிருந்து செய்யப்பட்டிருந்த மீதி உறுதிபாடுகள் பிரகாரம் பணியகத்தின் நிலையான வைப்பு முதலீடு ரூபா 2,641,230,569 ஆன போதும் நிதிக்கூற்றுக்களில் அம் முதலீடுகளில் பெறுமானம் ரூபா 2,596,992,830 ஆக காட்டப்பட்டதன் காரணத்தால் ரூபா 44,237,739 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டன. அவ்வாறாயினும் இவ் வித்தியாசத்திற்கு காரணங்களை கண்டறிந்து நிதிக்கூற்றுக்களில் சீராக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2021 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் பொது பணியகத்திற்கு சொந்தமான நிலையான வைப்பு மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளதுடன் பணியகத்தின் ஊழியர்களுக்கு உரித்தான பாரதூரதூரமான சுகயீன நிதியம் மற்றும் சுனாமி நில அதிர்ச்சி மத்திய நிலையத்திற்கு வெளிநாட்டிலிருந்த கிடைத்த உதவி தொகையை கணக்கீட்டு கொள்கை மற்றும் குறிப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. | முதலீடுகளின் பெறுமதியை சரியாக கணக்குகளில் வெளிப்படுத்த வேண்டும். |
| (ஆ) | 99 வருட குத்தகை அடிப்படையின் கீழ் பெற்றுக் கொண்ட காணியொன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கம்பஹ பிரதேச அலுவலகம் மற்றும் இருப்பு களஞ்சியத்திற்காக 2018 முதல் 2020 ஆண்டு வரை அபிவிருத்தி நடவடிக்கைக்காக மேற்கொண்டிருந்த ரூபா 8,193,693 ஆன செலவினம் கட்டிடமாக மூலதனமாக்க நடவடிக்கை எடுக்காது கடந்த வருட செம்மையாக்கலாக திரண்ட இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. அதனால் மீளாய்வாண்டில் திரண்ட இலாபம் மற்றும் கட்டிடங்களில் பெறுமதி அப் பெறுமானத்தால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | கம்பஹ பிரதேச அலுவலகம் மற்றும் இருப்பு களஞ்சியம் நிலவும் நிலம் பணியகத்திற்கு சொந்தமில்லாததுடன் அது 99 வருட குத்தகை அடிப்படையின் குத்தகைக்கு பெற்ற காணியொன்றாகும். எனினும் அங்கு பாதை அமைக்க மற்றும் கால்வாய் தொகுதியை அமைக்க மற்றும் காணியை பயன்படுத்த முடியுமான விதத்தில் ஒழுங்குபடுத்த மேற்கொள்ளப்பட்ட செலவாகையால் மூலதனமாக்கப்படவில்லை. | மூலதன மற்றும் நடைமுறை செலவினத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வெண்டும். |
| (இ) | கடந்த ஆண்டுகளில் பல்லேகெலே சுனாமி மத்திய நிலையத்தை பராமரிப்பதற்காக வெளிநாட்டு பல்கலைகழகமொன்றினால் | 2021 ஆண்டு மதல் இந்த நிலையான வைப்பு நிதிக்கூற்றுக்களில் கணக்கு கொள்கை | சரியான கணக்கு கொள்கையொன்றை தெரிவு செய்து அதன் பிரகாரம் கணக்கீடு |

| | | | |
|---|---|---|---|
| | பணியகத்திற்கு கிடைத்து செலவு செய்ததன் பின்னர் எஞ்சியிருந்த பணத்தை நடைமுறை பொறுப்பின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அதற்காக சரியான கணக்கு கொள்கையொன்றை தெரிவு செய்து அதன் பிரகாரம் கணக்கீடு செய்ய மற்றும் நிதிக்கூற்றுக்களில் மானியம் பெறுவனவு தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கடந்த ஆண்டுகளில் கணக்காய்வு அறிக்கைகளுடாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது மீளாய்வாண்டு மானியமாக கிடைத்திருந்த ரூபா 1,824,809 இனை மற்றும் மானிய பெறுவனவு மீதியால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையான வைப்புக்காக கிடைத்திருந்த முதலீட்டு வருமானம் ரூபா 359,498 இனை மற்றும் ஆண்டினுள் மானியங்களிலிருந்து செலுத்தப்பட்ட ரூபா 2,591,292 ஆன செலவினம் வேறாக கணக்கொன்றில் குறிப்பிட்டிருந்த போதும் இந்த வருமானம் மற்றும் செலவினங்கள் மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | மற்றும் குறிப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது. இந்த வெளிநாட்டு உதவித் தொகை கிடைத்துள்ளது பணியகத்தின் நடவடிக்கைக்காக அல்லாது சுனாமி தொலை தொடர்பு மத்திய நிலையங்களில் நடவடிக்கைக்காக ஆகும். | செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பணியகத்தின் துணை கம்பனியன் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் பணியகத்திலிருந்து கம்பனிக்கு கிடைக்க வேண்டிய மற்றும் கம்பனிக்கு செலுத்த வெண்டிய மீதிகள் முறையே ரூபா 4,698,378 இனை மற்றும் ரூபா 1,513,857 அனதுடன் பணியகத்தின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் பணியகத்திற்கு துணை கம்பனியிலிருந்து பெற வேண்டிய மற்றும் கம்பனிக்கு செலுத்த வேண்டிய மீதிகள் முறையே ரூபா 27,360,000 மற்றும் ரூபா 3,267,161 ஆனது. அதன் பிரகாரம் முறையே ரூபா 22,661,622 மற்றும் ரூபா 1,753,304 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. குழுமத்தின் நிதிக்கூற்றுக்களில் பணியகத்திலிருந்து கம்பனிக்கு மற்றும் கம்பனியிலிருந்து பணியகத்திற்கு பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளில் தேறிய பெறுமானமான ரூபா 27,277,360 இனை இடை கம்பனிகளின் கீழ் நடைமுறை சொத்துக்களாக காட்டப்பட்டிருந்தது. | தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களிலிருந்து ரூபா 3,267,161 ஆன கொடுக்கல் வாங்கல்கள் பணியகத்தினால் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. பணியகத்தின் மற்றும் ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவை கம்பனியில் கணக்கீடு செய்யப்படாத இடை கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கலந்துறையாடகள் நடாத்தப்பட்டதுடன் அக் கணக்குகள் தொடர்பாக மேலும் கலந்துறையாட வேண்டியுள்ளது. அதனை எதிர்காலத்தில் தீர்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை சரியாக இனங்கண்டு தீர்ப்பதற்கு மற்றும் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 756 | கடந்த ஆண்டில் நடைமுறையல்லாத சொத்துக்கள் மீது பௌதீக மெய்மையாய்வு அறிக்கை 2022 ஜுன் 30 அன்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் மீளாய்வாண்டின் யக்கல கிழையின் மற்றும் பிரதான அலுவலகத்தின் விஞ்ஞான கூடங்களில் பண்டங்கள் மாத்திரம் கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் பணியகத்தின் ஏனைய பிரிவுகளில் பண்டக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | 2021 ஆண்டிற்கான பணியகத்தின் யக்கல வெரல்லவத்த களஞ்சியத்தின் மற்றும் விஞ்ஞான கூடங்களிற்கு உரியதான பண்டக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கான அறிக்கை இத்துடன் சமர்ப்பிக்கப்படுவதுடன், எஞ்சிய பண்டக கணிப்பீடுகள் நாட்டில் தற்போது நிலவும் நிலைமையினுள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதனால் அவ் அறிக்கைகளையும் எதிர்காலத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கிறோம். | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருள் சட்டம் | | | |
| | (i) 26(1) மற்றும் 44(ஆ) பிரிவுகள் | அரசிற்காக பணியகம் அறவிட்ட அரசிறையை திறைசேரிக்கு அனுப்ப வேண்டிய போதும் 2016 முதல் 2021 வரை காலத்தினுள் திறைசேரிக்கு அனுப்பாது பணியகத்தின் நிறுத்தி வைத்திருந்த அரசிறை பெறுமதி ரூபா 3,147 மில்லியனானது. | பணியகத்தினால் பொது திறைசேரிக்கு ரூபா 8,410,000,000 மில்லியன் அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பணியகத்திற்கு கிடைத்த மொத்த அரச வருமானத்திலிருந்து பொது திறைசேரிற்கு செலுத்தியதன் பின்னர் ரூபா 3,147,241,802 எஞ்சியுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) 52(2) பிரிவு மற்றும் 1997 சனவரி 10 ஆம் திகதிய 958 ஆம் இலக்க வர்த்தமானி ஊடாக திருத்தப்பட்ட 21(அ) சுரங்கம் மற்றும் அகழ்வு கட்டளை | அகழ்வுகளின் பின்னர் 2 மாதங்கள் முதல் 09 வருடங்கள் வரையான காலத்தினுள் காணிகளை புனர்மைப்பு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் 1,943 அகழ்வு அனுமதிப்பத்திரதாரர்கள் ஊடாக அவ் வேலைகளை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே மேற் குறிப்பிட்ட அனுமதிப்பத்திரதாரர்களிடமிருந்து பெற்றுக்கொள்டிருந்த பெறுமதி ரூபா 439,004,539 ஆன வங்கி பிணை முறி பணமாக்கப்பட்டிருந்த போதும் அப் பணம் நில புனரமைப்பு நடவடிக்கைக்காக பயன்படுத்தாது செலுத்த வேண்டிய மீதியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பணியகத்தினால் புனரமைப்பு செய்யப்படாத அகழ்வு நிலங்களை புனரமைப்ப செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், புனரமைப்ப செய்யப்படாத 100 இற்கு கிட்டயளவு அகழ்வு இடங்களுக்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. புனரமைப்பு பிணை முறிக்காக பெற்றுக் கொண்டுள்ள வங்கி பிணைகளில் பெறுமதி , புனரமைப்பு செய்வதற்காக போதாததன் காரணமாக தற்போது பணியகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் புனரமைப்பு பிணைகளின் பெறுமதியை உயர்த்துவதற்கும் புனரமைப்பு திட்டத்தை தயாரிப்பது தொடர்பாக வழிகாட்டி கோவையொன்றை உள்ளக சுற்றறிக்கை ஊடாக வெளியிட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் காணி புனரமைப்பிற்காக சேர்க்கப்படும் பணத்தை அதற்காக செலவிட்டு காணிகளை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) 1997 சனவரி 10 ஆம் திகதி 958 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் திருத்தப்பட்ட 33(4) ஆம் சுரங்கம் அகழ்வு கட்டளை | சுரங்க உற்பத்திகளின் உறுதி செய்த வியாபார பெறுமதி, இடமளிக்கக் கூடிய கழிப்பனவுகள் மற்றும் அரசிறை செலுத்துதல் வேலைத் திட்டங்களுக்காக செயலாளருக்கு பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டு பணிகள் தொடர்பாக காலரீதியான திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அரசிறை சதவித அதிகரித்தல் அல்லது குறைத்தல் அமைச்சின் செயளாலரினால் கையொப்பம் இடப்படும் முதலீட்டு உடன்படிக்கையின் போது மாற்றுவதற்கு முடியும். இந்த நடவடிக்கை பணியகத்தினால் முதலீட்டு உடன்படிக்கை கைச்சாத்திடும் போது தற்போது நடைபெறுவதாக அறிவிக்கிறேன். | அரசிறை செலுத்தும் வேலைத்திட்டத்திற்காக காணிகளின் பெறுமதிகளை காலரீதியாக திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) 2009 இன் 66 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனிப்பொருள் | | | |

| | | | |
|---|---|---|---|
| (திருத்த) சட்டம் (i) 2 (உ) பிரிவு | கனிப்பொருட்களுக்காக பெறுமதி சேர்பதற்காக பயன்படுத்த வேண்டிய கட்டங்களை பணியகத்தினால் அறிமுகப்படுத்தாத காரனத்தால் அகழப்படும் காரியம், கனிய மணல் மற்றும் திரிகைகல் கனியத்திற்காக பெறுமதி சேர்க்கப்படாது மூலப் பொருளாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. | நிலவுகின்ற கனிப் பொருள் கொள்கை பிரகாரம் பணியகத்தினால் பெறுமதி சேர்க்கப்படாது கனிப் பொருள் ஏற்றுமதிக்காக அனுமதி வழங்கப்படமாட்டாது. தற்போது ஏற்றுமதி செய்ய அனுமதிக்கும் சில கனிப் பொருட்களுக்காக அமைச்சரவை பத்திரமூடாக இனங்காணப்பட்ட பெறமதி சேர்க்கும் எல்லைக்கு இணங்க கனிப் பொருள் ஏற்றுமதிக்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படுகிறது. | கனிப் பொருட்களிற்கான பெறுமதி சேர்க்கப்படும் வேலைத்திட்டத்தை விணைத்திறனாக அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) 37(அ)(ஆ) மற்றும் (ஈ) | அகழ்வு அனுமதிப்பத்திரத்துடன் தொடர்பான ஏதேனும் நிபந்தனை ஒன்றை மீறுதல், மணியகத்தினால் வழங்கப்பட்ட சட்ட ரீதியான பணிப்பொன்றை செயற்படுத்தாமை, பணியகத்தின் அனுமதியின்றி 03 மாதங்களை விஞ்சிய காலமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பணியகம் திருப்தியடையுமானால் அவ் அகழ்வு அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்ய பணியகத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. எனினும் கனிய மணல் அகழ்விற்கு 2017/2018 காலத்திற்காக வீ.வீ.எம் இலங்கா காரியம் (தனி) கமபனிக்கு மற்றும் 2014/2024 காலத்திற்காக எல்கெமி ஹெவி மெட்டல்ஸ் (தனி) கமபனிக்கும் கனிய மணலிற்காக வழங்கப்பட்ட அகழ்வு அனுமதிப்பத்திரம் மூலம் 2022 ஜுன் 30 திகதி வரை அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அவ் அனுமதிப்பத்தரத்தை | கணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ளதன் பிரகாரம், வீ.வீ.எம் இலங்கா (தனி) கமபனி மற்றும் எல்கெமி ஹெவி மெட்டல்ஸ் (தனி) கமபனி ஆகிய இரண்டு கம்பனிகளுக்கும் சட்ட மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க பணியகத்தினால் 10 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் வகையில் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன், பணியகத்தினால் 2017 ஆண்டின் போது எல்கெமி ஹெவி மெட்டல்ஸ் (தனி) கமபனிக்கு வழங்கியுள்ள இரண்டு அனுமதிப்பத்திரங்களையும் சட்டம் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க பணியகத்தினால் இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன், சட்டம் பிரகாரம் அனுமதிப்பத்திரதாரர்களினால் அமைச்சின் | அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளாத நிறுவனங்களின் அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்து மீண்டும் வேறு அகழ்வு நிறுவனங்களிற்கு ஒப்படைக்க நடவடிக்கை வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இரத்துச் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செயலாளருக்கு செய்யப்பட்ட முறையீடொன்றின் பின்னர் மீண்டும் அனுமதிப்பத்திரத்தை ஏற்புடையதாக்க பணியத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2002 ஏப்ரல் 19 ஆந் திகதிய 1232/14 ஆம் இலக்க மற்றும் 2017 நவம்பர் 17 ஆந் திகதிய 2045/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு நாணயமாற்று கட்டளை | இலங்கையினுள் சுரங்க அகழ்வு மேற்கொள்ளுகின்ற கம்பனியொன்றின் மொத்த பங்கு உரிமையின் வெளிநாட்டு உரித்து 40 சதவீதம் வரையாக இருக்க வேண்டியதுடன் அந்த எல்லையினை விஞ்சி வெளிநாட்டு உரித்து காணப்படுமாயின் இலங்கை முதலீட்டுச் சபையின் விசேட அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும் இலங்கையில் காரியம் அகழ்வு மேற்கொள்கின்ற போகல, கிறப்பைட் கம்பனியில் மொத்த பங்குகளின் உரித்து 86.55 சதவீதம் 02 வெளிநாட்டு கம்பனிகளுக்கு உரியதாக இருந்ததுடன், இந்தக் கம்பனிகள் இலங்கை முதலீட்டு சபையிலிருந்து அவ்வாறு அங்கீகாரம் பெற்று அல்லது அந்த சபையுடன் முதலீட்டு உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்க வில்லை. எனினும் இது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் இந்தக் கம்பனிக்கு காரியம் அகழ்வுக்காக பணியகத்தினால் 02 அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. | முதலீட்டு சபையின் அங்கீகாரமொன்றை பெற்றுள்ளனவா என பணியகத்தினால் தற்போது விசாரணை ஒன்றை செய்துள்ளது. அதன் பிரகாரம், அவர்களிடமிருந்து கிடைக்கும் தகவல்களின் மீது எதிர்காலத்தில் பணியகத்தினால் முதலீட்டு சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | வர்மானியில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2017 மார்ச் 29 திகதிய அமப/17/530/704/009 இலக்க அமைச்சரவை தீர்மானம். | அரச அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மஹவெலி அதிகார சபையினால் முகாமைத்துவம் செய்யும் ஆறுகள் மற்றும் ஆற்றங்கரைகளில் காணப்படும் கனிப்பொருட்களை அகற்றும் போது அப்பிரதேசங்களில் | பொலன்னறுவ மாவட்டத்தில், மஹவெலி ஆற்றில், மனம்பிடிய பிரதேசத்தில் வனசீவராசிகள் வலயத்தினுள்ள படிவாகியுள்ள மணற் படிவுகளை அகற்ற இலக்கம் 81/2004 | அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்படுவதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| விரிவான சுற்றாடல் தாக்கம் பற்றிய மதிப்பீடொன்றை செய்து எல்லையின்றி அக்கனிய பொருட்களை அகற்றுவதனால் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதகமான தாக்கத்தை குறைத்துக் கொள்ளும் முக்கியத்துவத்தையும் கவனத்திற் கொண்டு பணியகத்தினால் ஜீஎஸ்எம்பீ தொழிநுட்ப சேவை (தனி) கம்பனிக்கு மாத்திரம் அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டுமென குறிப்பிடப்படுகிறது. பணியகத்தினால் மீளாய்வாண்டினுள் அக் கம்பனிக்கு மேலதிகமாக 82 அனுமதிப்பத்திரதாரர்களுக்கு மஹவெலி அதிகார சபைக்கு சொந்தமான மாதுருஓயவில் மணல் அகழ்விற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தன. | கொண்ட உயர் நீதிமன்ற வழக்கு மூலம் கிடைத்த கட்டளையின் மீது ஜீ.எஸ்.எம்.பீ. தொழிநுட்ப சேவை (தனி) நிறுவனத்திற்கு மணல் அகழ 2008 ஆண்டு முதல் பணியகத்தினால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டது. மனப்பிடிய தவிர பொலன்னறுவ மாவட்டத்தில் மஹவெலி ஆற்றில் மற்றும் மாதுருஓய அன்மித்ததாக மணல் அகழ்வு அனுமதிப்பத்தரம் ஏனைய நபர்களுக்கு மணல் அகழ்வதற்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டது. அதன் பிரகாரம், காணியின் உரிமையை உடைய இலங்கை மஹவெலி அதிகார சபையின் அங்கீகாரத்தின் மீது ஏனைய நபர்களுக்கு மணல் அகழ்விற்காக அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் சட்ட ரீதியாக பிரச்சினையொள்றில்ல என அறிவிக்கிறோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் குழுமத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,564,466,354 ஆன இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 730,394,526 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 834,071,758 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு பணியகத்தின் மற்றும் துணை கம்பனிகளின் வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆண்டில் திறைசேரி செயலாளர் மற்றும் ஜர்மன் கம்பனியொன்றிற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் மூலம் போகல கிரேபைட் கம்பனியினால் அரசிற்கு சொந்தமான 50.01 சதவீதமான பங்குகளை இந்த ஜர்மன் கம்பனிக்கு ஒப்படைத்திருந்ததுடன் இவ் ஒப்பந்த பிரகாரம் கொள்வனவு செய்யும் கம்பனியானது இலங்கையினுள் காரியத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழிலை அபிவிருத்தி மற்றும் விற்பனை செய்ய அரச வியாபார ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்க இணங்கியிருந்தது எனினும், கம்பனியினால் காரியத்தை அடிப்படையாக்க கொண்ட கைத்தொழில் அபிவிருத்தயொன்றை இலங்கையினுள் மேற்கொண்டிருக்காததுடன் கம்பனியினால் அகழ்வு செய்யும் காரியத்தை பெறுமான சேர்க்கப்படாது மூலப்பொருளாக ஏற்றுமதி செய்யப்படுகின்றது. | போகல கிரேபைட் கம்பனியின் கீழ் விநியோகிக்கபடும் அகழ்வு அனுமதிப்பத்திரத்தின் கீழ் புவி மேற்பரப்பிலிருந்து 1000 அடிகளை விஞ்சிய ஆழத்திலிருந்து பாரியளவான மூலதனமொன்றை ஈடுபடுத்தி மேற்கொள்ளும் அகழ்வுகளின் பின்னர் புவி மேற்பரப்பிற்கு கொண்டு வரும் கனியங்களை மீள் தயாரித்தலிற்குட்படுத்தி ஏற்றுமதிக்காக தயாரிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் கனிப்பொருளின் பெறுமதி சேர்ப்பதற்காக போகல கிரபையிட் கம்பனி உள்ளிட்ட அனைத்து காரிய அகழ்வு அனுமதிப்பத்திரதாரர்கள் பாரிய முதலீடொன்றை மேற்கொள்கிறார்கள். அதன் பிரகாரம், தற்போது காரிய தாதுப்பொருளை பணியகத்தினால் இணங்கண்ட பெறுமதி சேர்க்கப்படலிற்கு இணங்க ஏற்றுமதி செய்யப்பட்ட போதும், எதிர்காலத்தில் அதற்காக புதிய பெறுமதிகளை சேர்க்கும் எல்லைகளை அறிமுகப்படுத்தவும், அவ்எல்லைகளிற்கு இணங்க ஏற்றுமதிக்காக அனுமதி வழங்கவும் நடவடிக்கை எடுக்கவும் பணியகம் தேவையான அடிப்படை நடவடிக்கைகளை தற்போது மேற்கொள்கின்றது. | பணியகம் இது தொடர்பாக விரைவில் உரிய ஒழுங்கமைப்பொன்று மெற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | கஹடகஹ கிறேபைட் கம்பனி அகழ்வு மேற்கொள்ளும் கஹடகஹ சுரங்கத்தில், பணியகத்தினால் வருடாந்தம் மற்றும் விஷேட சந்தரப்பங்களில் மேற்கொள்ளும் கள பரிசோதனையின் போது அங்கு நிலவும் குறைபாடுகள் தொடர்பாக பரிசோதனை அறிக்கை ஊடாக தொடர்ந்து அறிவூட்டப்பட்டு அகழ்வு அனுமதிப்பத்திரம் வருடாந்தம் | இந்த காரியம் சுரங்கத்திற்காக வழங்கப்பட்டுள்ள அகழ்வு அனமதிப்பத்திரத்தை வருடாந்தம் நீடிப்பு செய்வதுடன், அச் சரங்கத்தில் காணப்படும் குறைபாடுகளை சரி செய்ய பணியகத்தினால் நிபந்தனை விதிக்கப்பட்டள்ளதுடன், வருடாந்தம் புதுப்பிற்கும் பொது அங்கு நிபந்தனைகளூடாக வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகள் பின்பற்றப்பட்டுள்ளதா என்பது மேற்பார்வை செய்யப்படுகிறது. | கள பரிசோதனையின் பொது இனங்காணப்பட்ட குறைபாடுகளை சரி செய்துள்ளதா என்பதனை மேற்பார்வை செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நீடிப்பு செய்துள்ளதுடன் குறித்த கம்பனியினால் அக் குறைபாடுகளை சீர் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லையென பரிசோதனை அறிக்கைகள் மூலம் உறுதியானது. | | |
| (இ) | மீளாய்வாண்டினுள் பணியகத்தின் அகழ்வு பொறியியளாலர்கள் மற்றும் புவியியல் விஞ்ஞானிகளுடன் கூடிய தொழிநுட்ப குழுவினால் மேற்கொண்ட கள பரிசோதனையொன்றின் மற்றும் குழுக் கூட்டமொன்றின் பின்னர் ககுறா கிறேபைட் கம்பனிக்கான அகழ்வு அனுமதிபத்பத்திரத்தை ஓராண்டினால் நீடிக்க அக்குழுவின் பணிப்பாளர் (சுற்றாடல் பாதிப்பு மதிப்பீடு மற்றும் பிராந்தியம்) இனால் பரிந்துரைத்திருக்கையில் குறித்த அனுமதிப்பத்திரத்தை 2021 முதல் 2031 வரை 10 ஆண்டுகளிற்கு நீடிக்க பணியகத்தினால் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் இதற்காக பணியக உறுவாக்க சட்டம் அல்லது ஏனைய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் விஷேட அதிகாரம் வழங்கியிருக்கவில்லை. | சட்டம் மற்றும் பிரமாணங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள சட்ட விதிகளிற்கு இணங்க தொழிநுட்ப அகழ்வு (ஒ) தொகுதியின் அனுமதிப்பத்திர ஏற்புடைய காலத்தை பணியக பணிப்பாளரிற்கு முன்வைத்துள்ள பொருளாதார உயிரியல் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு திர்மானிக்க முடியும். அதன் பிரகாரம், முன்வைத்துள்ள பொருளாதார உயிரியல் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பதாரரினால் சட்டம் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க விடுத்த கோரிக்கையின் மீது தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துள்ளதால் பணியகத்தினால் 10 ஆண்டுகளுக்கு அனுமதிப்பத்திரத்தை விநியோகித்துள்ளது. | பணிய உறுவாக்க சட்டத்தின் மூலம் அல்லது வேறு அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் விஷேட அதிகாரம் வழங்கப்படாத செயற்பாடுகளுக்கு அங்கீகாரம் வழங்கப்படக் கூடாது. |
| (ஈ) | கரஸ்னாகல காரிய சுரங்கத்தின் சர்கோன் டிவலொப்மன் தனியார் கம்பனியினால் மேற்கொள்ளப்படுவதுடன் அதன் பூரண உரிமையை வெளிநாட்டு தரப்பினர்களுக்குரியதாக காணப்படுவதால் இலங்கையில் காரிய ஆராய்ச்சி, அகழ்வு மற்றும் உள்நாட்டு சந்தை மற்றும் வெளிநாட்டு சந்தைக்கு விற்பனை செய்ய அக் கம்பனி 2012 ஆண்டில் இலங்கை முதலீட்டு சபையுடன் உடன்படிக்கை செய்திருந்தது. உடன்படிக்கை பிரகாரம் குறித்த செயற்பாடுகள் இடம்பெற்றிருக்காததால் அவ் உடன்படிக்கை ஏற்புக்காலத்தை | எதிர்பார்த்த கனியப் பொருட்களை உற்பத்தி செய்ய காரிய அனுமதிப்பத்திரத்தின் கீழ் இயலாத சந்தர்ப்பம் காணப்படுகின்றது. அதன் பிரகாரம், இக் கம்பனியும் தற்போது அகழும் காரியங்களிலிருந்து 01 டொ்ன அளவு மாத்திரம் தற்போது ஏற்றுமதி செய்துள்ளது. எவ்வாறாயினும் தற்போது முதலீட்டாளர்களிற்கிடையில் காணப்படும் சட்டப் பிரச்சினை ஒன்றின் மீது அகழ்வு அனுமதிப்பத்திர வேலைகள் குறைத்த மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. | உடன்படிக்கைகளின் ஏற்புப் தன்மை தொடர்பாக பரிசோதிக்க வேண்டியதுடன் பணியகம் உரிய ஒழுங்கமைப்பை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2018 வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் அவ் உடன்படிக்கையின் ஏற்புடைய காலம் தொடர்பாக மேலும் பரிசோதிக்காது இச் சுரங்கத்திற்காக 2019 ஆகஸ்ட் 26 முதல் 2022 பெப்ரவரி 28 வரை 02 சந்தர்பங்களில் அகழ்வு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது.<br>2019 – 2021 காலத்தினுள் இக் காரிய சுரங்கத்தினுள் காரிய அகழ்வு போதியளவாக மேற்கொண்டிருக்காததுடன் 2020 ஆண்டில் 01 டொன் காரியம் மாத்திரம் வெளிநாடொன்றிற்கு மூலப்பொருளாக ஏற்மதி செய்யப்பட்டிருந்தது. | | |
| (உ) | 1991 ஆண்டில் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினூடாக வெளியிடப்பட்ட தற்போது பயன்பாட்டிலுள்ள தேசிய கனியப் பொருட்கள் கொள்கையின் பிரகாரம் காணப்படும் கனிப்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களிற்காக பெறுமதி சேர்க்க வேண்டிய போதும் போகல கிறேபைட், கஹடகஹ கிறேபைட், கரஸ்னாகல மற்றும் சகுறா கிறேபைட் ஆகிய நான்கு கம்பனிகளினால் 2019 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான காலத்தினுள் பெறுமதி சேர்க்காது 1 கிலோ கிராம் காரியத்தை ரூபா 282 இற்கும் ரூபா 415 இற்குமிடையிலான விலைக்கு 7,632,000 கிலோ கிராம் ரூபா 2,708 மில்லியன் பெறுமதிக்கு ஏற்றுமதி செய்திருந்தது. | புவி மேற்பரப்பிற்கு கொண்டுவரும் கனியங்களை மீள் தயாரித்து ஏற்றுமதிக்காக தயாரிக்கப்படுகின்றது.<br>இதன் பிரகாரம், அடிப்படை பெறுமதி சேர்த்தலொன்று கனியப் பொருள் ஏற்றுமதியின் போது அனுமதிப் பத்திரதார்களால் மேற்கொண்டுள்ளதுடன், பணியகத்தினால் காரியத்திற்காக பெறுமதி சேர்க்கும் எல்லகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கின்றது. | காரயத்தை மிகக் குறைந்த விலைக்கு ஏற்றுமதி செய்வதற்கு பதிலாக தொழிநுட்பத்தை பயன்படுத்தி முடிவு அல்லது அரை முடிவு உற்பத்திகளை தயாரித்து ஏற்றுமதி செய்ய முயற்ச்சி எடுக்க வேண்டும். |
| (ஊ) | மன்னார் மாவட்டத்தில் கனிய மணல் அகழ்வு மற்றும் பெறுமதி சேர்க்க முதலீட்டு சபை மற்றும் டீ.வீ.எம் இலங்கை காரிய (தனி) கம்பனிக்கிடையில் 2012 ஆண்டில் முதலீட்டு உடன்படிக்கை ஒன்றில் ஈடுபட்டிருந்ததுடன் அக் கருத்திட்டத்தை செய்யாத | சட்டம் மற்றும் பிரமாணங்களின் கீழ் அகழ்வு எ மற்றும் பீ தொகுதியின் அனுமதிப்பத்திரமொன்றை சட்டரீதியாக ஒப்படைக்க சட்டம் தயாரிக்கப்பட்டுள்து. அதன் பிரகாரம், முன்வைக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் தொழிநுட்ப விடயங்களை, உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டு | உடன்படிக்கையை பரிசோதிக்காது அனுமதிப்பபத்தரம் வழங்கப்படாததுடன் அகழ்வு மேற்கொள்ளாத அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணத்தால் குறித்த உடன்படிக்கை 2020 பெப்ரவரி 25 திகதி இலங்கை முதலீட்டு சபையினால் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இவ் உடன்படிக்கையை பரிசோதிக்காது பணியகத்தினால் திருகோண மலை மூதூர் பிரதேசத்தில் கனிய மணல் அகழ்விற்கு 2017 முதல் 2018 ஆண்டு வரையும், 2018 ஜுலை 12 முதல் 2028 ஜுலை 11 வரை 10 ஆண்டுகளிற்கும் அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்கியிருந்தது. எனினும், மீளாய்வாண்டு இறுதி வரையும் எந்தவித அகழ்வும் செய்திருக்காததுடன் மீளாய்வாண்டில் புதிதாக பதிவு செய்யப்பட்ட கம்பனியொன்றிற்கு இவ் அனுமதிப்பத்திரத்தை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டு இருந்தது. | அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் கீழ் ஒப்படைப்பு மேற்கொள்ளப்பட்டது. | |
| (எ) | கடற்கரை பாதுகாப்பு மற்றும் கடற்கரை வள முகாமைத்துவ திணைக்களத்தினால் டீ.வீ.எம் இலங்கை கனிப்பொருள் கம்பனிக்கு மற்றும் எல்கெம் ஹெவி மெடல் கம்பனிக்கு முறையே 2018 ஒக்டோபர் 23 திகதியின் பின்னர் மற்றும் 2017 திசெம்பர் 20 திகதியின் பின்னர் குறித்த கடற்கரையோரங்களில் கனிய மணல் அகழ்வு மேற்கொள்ள அனுமதிப் பத்திரம் வழங்கியிருக்காத போதும் பணியகம் 10 ஆண்டுகளுக்கு இக் கம்பனிக்கு அனுமதிப்பத்திரம் வழங்கியிருந்தது. | ஆரம்ப சுற்றாடல் பரிசோரனை ஆய்வின் மீது கடற்கரை பாதுகாப்பு மற்றும் கடற்கரை வள முகாமைத்துவ திணைக்களத்தால் வருடாந்தம் அத் திணைக்களத்தின் அங்கீகாரத்தை விநியோகிப்பதுடன், அனுமதிப் பத்திரதாரரினால் குறித்த பரிந்துரையின் மீது அனுமதிப் பத்திரத்தால் வழங்கியுள்ள விடயங்களை மேற்கொள்ள வேண்டும். | கடற்கரைகளில் கனிய மணல் அகழ்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்குகையில் உரிய அங்கீகாரத்தை பெற்றுள்ளது பற்றி கவனம் செலுத்த வேண்டும். |
| (ஏ) | 2017 மே 22 ஆந் திகதி அமைச்சரவை மேற்கொண்ட அறிவித்தலின் பிரகாரம் கனிய வளங்கள் தொடர்பாக தேசிய கொள்கையொன்று தயாரித்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு 2022 ஜுன் 30 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1999 இன் போது கைத்தொழில் அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட தேசிய கனிப்பொருள் கொள்கைக்கு இணங்க தற்போது பணியகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அக் கொள்கையை கைத்தொழிலிற்கு பொருந்தும் வகையில் திருத்தி தற்போது அது சுற்றாடல் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | கனிய வளங்கள் தொடர்பாக தேசிய கொள்கையொன்றை விரையில் தயாரித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இது தொடர்பாக சுற்றாடல் அமைச்சுடன் கலந்துரையாடி எதிர்வரும் 06 மாத காலத்தினுள் புதிய கொள்கையொன்றை வெளியிட நடவடிக்கை எடுக்க பணியகத்தினால் கலந்துரையாடப்படுகின்றது. | |
| (ஐ) | கருங்கல் அகழ்வு அளவை இனங்காண்பதற்கு ஆய்வுரீதியான முறைமையொன்று இதுவரை பின்பற்றி இருக்காததுடன் கருங்கல் அகழ்விற்காக ஈடுபடுத்தப்படுகின்ற வெடிபொருளின் இரண்டு மடங்கு அகழ்வு செய்யப்பட்ட கியூப் அளவாக கருதி அடிப்படை ஒன்றின்றி அரசிறை அறவிடப்படுகின்றது. | பயன்படுத்தும் வெடிபொருள் அளவின் மீது மேற்கொள்ளும் அகன்ற கனியளவு தொடர்பாக கணக்கிடுகையில் அதனுள் தென்படும் பிரச்சினையாவது, பெற்றுக் கொண்ட மொத்த வெடிபொருளையும் அவ் அகழ்விற்காக பயன்படுத்தப்பட்டனவா இல்லையெனின் வேறொறு இடத்தில் அகழ்விற்காக பயன்படுப்பட்ட்டனவா என தெளிவொன்றை இணங்கான முடியாமையாகும். அப் பிரச்சினையை தவிர்ப்பதற்காக அடிக்கடி அகழ்வு செய்யப்படும் கருங்கல் அளவை மற்றும் பயன்படுத்தி வெடிபொருளின் அளவை ஒப்பிட எழுமாறாக பரிசோதிக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆய்வுரீதியான முறைமையொன்று விரைவில் தயாரிக்க வேண்டும். |
| (ஓ) | யான் ஓய நீர்த்தேக்க கருத்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக 2016– 2018 காலத்தினுள் பயன்படுத்தப்பட்ட 1,343,810 கியூப் மண் மற்றும் 3,397 கியூப் மணல் என்பவற்றுக்காக முறையே கிடைக்க வேண்டிய ரூபா 26,876,200 மற்றும் ரூபா 543,490 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 27,419,690 தொகையான அரசிறையை ஒப்பந்த கம்பனியிலிருந்து மீளாய்வாண்டு இறுதிவரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பணியகத்தினால் குறித்த அரசிறையை செலுத்துமாறு யான் ஓய நீர்த்தேக்க கருத்திட்டத்தை செயற்படுத்தி சீன கம்பனிக்கு மற்றும் கருத்திட்ட உரிமை கொண்டுள்ள நீர்பாசன திணைக்களத்திற்கு அரசிறையை செலுத்துமாறு அறிவித்த போதும், இதுவரை அவர்களால் அக் கொடுப்பனவை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எவ்வாறாயினும், பணியகத்தினால் நீர்பாசன திணைக்களத்துடன் மேற்கொண்ட கலந்துரையாடல் பிரகாரம் இது தொடர்பாக பணியகம் மற்றும் நீர்பாசன திணைக்களத்திற்கு இடையில் மேலும் கலந்துரையாட வேண்டுமென அறிவித்துள்ளதால், அது தொடர்பாக எதிர்காலத்தில் இரு தரப்பினர்களிற்கு இடையில் கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்படவுள்ளது. | இந் நிலுவையை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | 82 தனியார் அனுமதிப் பத்திரதாரர்களிற்கு மஹவெலி அதிகார சபைக்கு சொந்தமான மாதுருஓயவில் மணல் அகழ்வதற்கு மாதாந்த கொள்ளவு 100 கியுப் அகழ்வு அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அதனூடாக 03 கிழமை நாட்கள் மாத்திரம் அகழ்வு மேற்கொள்ள அங்கீகாரம் வளங்கப்பட்டிருந்தது. எனினும் அனுமதிப் பத்திரதாரர்கள் சுற்றாடல் அதிகார சபை மற்றும் பணியகம் வெளியிட்டுள்ள அகழ்வு நிபந்தனைகளை மீறி மேற்கொள்ளும் மாதாந்த கொள்ளவான 100 கியுப்பளை விஞ்சி 07 கிழமை நாட்களிலும் அகழ்வு செய்திருந்ததுடன் பணியகத்தினால் இது தொடர்பாக உரிய ஒழுங்கொன்றை மேற்கொண்டிருக்கவில்லை. | பொலன்னறுவ மாவட்டத்தில், மஹவெலி ஆற்றில் மணல் அகழ்வதற்கு 82 தனியார் அனுமதிப் பத்திரதாரர்களுக்கு மாதாந்தம் 100 மணல் கியுப்கள் வீதம் அகழ்வதற்கும், அவ் அகழ்வ நடவடிக்கைகளை வாரத்தில் திங்கள், புதன் மற்றும் வெள்ளி கிழமைகளில் மாத்திரம் மேற்கொள்ளுமாறு நிபந்தனை விதித்து அகழ்வு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டுள்ளது.<br>அந் நிபந்தனைகளை மீறி அகழ்வு மேற்கொள்வதாக பணியகத்திற்கு கிடைத்த முறைப்பாடுகளின் பிரகாரம் பணியக திடீர் சோதனை பிரிவினால் பல சோதனைகளை மேற்கொண்டுள்ளது.<br>அதற்கு மேலதிகமாக சட்டம் மற்றும் பிரமாணங்களின் கீழ் அனுமதியற்ற செயற்பாடுகளை தவிர்க்க இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கும் சட்டத்தை அமுல்படுத்த அதிகாரம் கிடைத்துள்ளதால், இது தொடர்பாக சோதனை மேற்கொள்ள பணியகத்தினால் இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளது.<br>அதற்கு மேலதிகமாக விஷேட அதிரடிப்படையிற்கும் அகழ்வு அனுமதிப் பத்திரம் தொடர்பான சோதனை மேற்கொள்ள பணியகத்தின் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பணியகத்தினால் உரிய ஒழுங்கமைப்பு ஒன்றை மேற்கொள்ள வேண்டும். |
| (ஔ) | கந்தலாய் மணல் அகழ்வு கருதிட்டத்திற்காக பணியகத்தினால் விநியோகிகிகப்பட்ட IML/A/HO/13015 கொண்ட அகழ்வு அனுமதிப் பத்திரத்தின் அகழ்வு பிரதேசம் 01 ஹெக்டயர் எனக் குறிப்பிட்டிருந்த ரோபதும் அகழ்வு செய்த A எனும் மணல் படிவு ஹெக்டயர் 06 – 07 அளவான பிரதேசத்திற்கு பரந்திருந்தது. அவ்வாறே அகழ்வு அனுமதிப் பத்திரத்தில் மாதாந்தம் அகழ முடியுமான உச்ச கொள்ளளவு குறிப்பிடப்படவில்லை எனவும், | கந்தலாய் - சூரியபுற மஹவெலி ஆற்றின் கரைகளுக்கு ஏற்படும் பாதிப்பை தடுக்க மதிலொன்றை நிர்மாணிப்பதனை பிரதானமாக்க கொண்டு இலங்கை மஹவெலி அதிகார சபை, நீர்மாசன திணைக்களம் மற்றும் வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பரிந்துரைகளுக்கு கீழ் ஆற்றங்கரைகளுக்கு மாதிப்பு ஏற்படும் வகையில் படிந்துள்ள மணற் படிவுகளை அகற்ற பணியகத்தினால் ஜீ.எஸ்.எம்.பீ. தொழிநுட்ப சேவைகள் (தனி) நிறுவனத்திற்கு இலக்கம் IML/A/HO/13015 கொண்ட | அகழ்வு பற்றிய மேற்பார்வை மற்றும் அனுமதிப்பத்திரத்தின் குறைபாடுகளை சீர்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அகழ்வு மேற்கொள்ள இயந்திர உபகரணங்களை பயன்படுத்த முடியுமா என மற்றும் பயன்படுத்த முடியுமான இயந்திர உபகரணங்கள் எதுவென மணல் படிவின் அகழ முடியுமான மட்டம் மற்றும் அகழ வேண்டிய பிரதேசத்தின் சரியாக GPS தொகுதி இலக்கம் குறிப்பிடப்படவில்லை எனவும் அகழ்வு நடவடிக்கைகளை பணியகத்தினால் அல்லது மூன்றாம் தரப்பினரால் முழுநேர மேற்பார்வைக்கு உட்படுத்துவது பொருத்தமென பணியக அகழ்வு பொறியியலாளர் ஒருவரினால் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டினுள் அவ் அகழ்வு தொடர்பாக மேற்பார்வை மற்றும் அகழ்வு அனுமதிப்பத்தித்தில் குறிப்பிடப்படும் மேற்படி குறைகளை பணியகம் சீர்செய்திருக்கவில்லை.

தொழிநுட்ப அகழ்வு அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. இது அடிப்படையில் ஆற்றங்கரைகளிற்கு பாதிக்கும் மணற் படிவை அகற்றி, பாதிப்புள்ளாகியுள்ள ஆற்றங்கரையின் மதில் ஒன்றை நிர்மாணிப்பதை பிரதானமாகக் கொண்டு இலங்கை மஹவெலி அதிகார சபை மற்றும் நீர்பாசன திணைக்களத்தின் தேவைப்பாட்டின் மீது விநியோகிக்கப்பட்ட ஒன்றாவதால், இதன் மேற்பார்வை அந் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.